**<u>STARTING TIME 11.58 A.M</u>**

# IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.

## O.S. No. 233/2019

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 24.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : Kiran Mayi Husband's Name : HariKrishnan

Address : C-1, Leela Manor, Balaji Nagar,
Siripuram, Visakhapattnam.

Age : 44

**(சாட்சிக்கு தமிழ் தெரியாது என்பதாலும், தாய் மொழி தெலுங்கு என்பதாலும், இருதரப்பு வழக்கறிஞர்களின் சம்மதத்துடன் சாட்சியிடம் தெலுங்கில் கேள்விக் கேட்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்)**

**1 , 2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பக்தவச்சல நாயுடு எனது அம்மாவின் அப்பா என்றால், சரிதான். பக்தவச்சல நாயுடுவின் மனைவி பெயர் ரவனம்மாள் என்றால், சரிதான். மேற்படி இருவருக்கும் 3 மகன்கள், 2 மகள்கள் வாரிசுகள் என்றால், சரிதான். மகன்கள் பெயர் ஜானகிராமன், சுதாகர் மற்றும் விஜயகுமார் என்றால், சரிதான். மகள்கள் பெயர் லலிதா மற்றும் வாணி என்றால், சரிதான்.

2. மேற்படி லலிதா எனது தாயார் என்றால், சரிதான். எனது தாயார் லலிதா, 7–ம் பிரதிவாதியை திருமணம் செய்துக் கொண்டார் என்றால், சரிதான். எனது

பெற்றோர்களுக்கு ஒரு மகன், இரண்டு மகன்கள் வாரிசுகள் என்றால், சரிதான். எனது சகோதரர் பெயர் ஸ்ரீ ஹர்ஷா என்றால், சரிதான். ஸ்ரீ ரேகா என்பவர் எனது அக்கா என்றால், சரிதான்.

3. எனது தாயார் மற்றும் சகோதரர் ஹர்ஷா கடந்த 1984–ம் ஆண்டு இறந்துவிட்டார் என எனது தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவர்கள் இறப்பு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது தாயாரும், சகோதரரும் கடந்த 24.05.1986 அன்று தான் காலமானார்கள் என்றால், சரியல்ல.

4. என் தாயார் காலமான பிறகு அவரது உடன்பிறந்த சகோதரியான 2–ம் பிரதிவாதி வாணியை, எனது தகப்பனாரான 7–ம் பிரதிவாதி 2–ம் திருமணம் செய்துக் கொண்டார் என்றால், சரிதான். 2, 7 பிரதிவாதிகளுக்கு சுச்சரிதா என்ற மகள் பிறந்தார் என்றால், சரிதான்.

5. தாவாவில் சொல்லியுள்ள சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால், தற்போது நினைவில் இல்லை. தாவா சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால், மாங்காட்டுசேரி கிராமம் மற்றும் சுப்பா நாயுடு கண்டிகை கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், போலைய நாயுடுவிற்கு பாத்தியப்பட்டதாகும். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால், தெரியாது, சுப்பா நாயுடு என்பவரை தெரியும்.

6. போலைய நாயுடு தாவா சொத்துக்களை பொறுத்து என்ன செய்தார் என்றால், எனது தாத்தா பக்தவச்சல நாயுடு பெயருக்கு 02.06.1982 அன்று ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்தார். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணத்தின் அசலை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு எனது வழக்கிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ காரணம் எதுவும் கூறவில்லை என்றால், சரிதான்.

7. எனது தாத்தா பக்தவச்சல நாயுடு 21.02.1998 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அவரது இறப்பு சான்றையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது தாத்தாவின் இறப்பு தேதி 21.02.1998 என்பது சரியா என்றால், சரிதான். எனது தாத்தா பக்தவச்சல நாயுடுவின் மனைவியான ரவனம்மாள் 06.01.2005 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான்.

8. எனது தாத்தா காலமான பிறகு அவரது சொத்துக்களுக்கான பட்டா எனது பாட்டி ரவனம்மாள் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. எனில் யார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால், யார் பெயரிலும் மாற்றம் செய்யவில்லை, இன்றைய தேதி வரை எனது தாத்தா பக்தவச்சல நாயுடுவின் பெயரிலேயே உள்ளது. அது போல் தாவா சொத்துக்களுக்கான பட்டா இன்றைய தேதி வரையில் என் தாத்தா பக்தவச்சல நாயுடு பெயரிலேயே உள்ளது என்பதற்கான பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

9. 2–ம் பிரதிவாதியும், 7–ம் பிரதிவாதியும் தற்போது ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். என் தாயார் காலமான போது எனக்கும் எனது அக்காவுக்கும் என்ன வயது என்றால், எனது அக்காவுக்கு 5 வயது, எனக்கு 3 வயது ஆகும். எனது தாயார் காலமான பிறகு என்னையும், என் அக்காவையும் பராமரித்து வளர்த்து வந்தது எனது தகப்பனார் மற்றும் 2–ம் பிரதிவாதி தான் என்றால், சரிதான்.

10. நான் என்ன படித்துள்ளேன் என்றால், தற்போது ஆராய்ச்சி படிப்பு படித்து வருகிறேன். எனது அக்கா என்ன படித்துள்ளார் என்றால், அவர் பட்டப் படிப்பு படித்துள்ளார். எனது அக்கா முதலாம் ஆண்டு பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்த போதே அவருக்கு பிரபாகரன் என்பவருடன் விசாகப்பட்டிணம் 1997–ஆண்டு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால், சரிதான். அவர்கள் இருவருக்கும் 05.12.1998 அன்று கீர்த்தனா என்ற மகள் பிறந்தார் என்றால், சரிதான்.

11. எனது அக்காவுக்கு மேற்படி கீர்த்தனா என்ற மகள் பிறந்த பிறகு எனது அக்காவும், அவரது கணவரும் கடந்தத 2003–ம் ஆண்டு பிரிந்துவிட்டார்கள் என்றால், சரிதான். அதன் பிறகு எனது அக்கா மற்றும் அவரது மகள் கீர்த்தனாவை எனது தகப்பனார் தான் 2005–ம் ஆண்டு வரை பராமரித்து வந்தார் என்றால், சரிதான். அதன் பிறகு எனது அக்கா, பவன்குமார் என்பவரை 26.11.2005 அன்று திருமணம் செய்துக் கொண்டார் என்றால், சரிதான். எனது அக்கா ஸ்ரீரேகா இவ்வழக்கில் 6–ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால், சரிதான். அதன் பிறகு 6–ம் பிரதிவாதி மேற்படி பவன்குமார் என்பவருடன் தான் வசித்து வருகிறார் என்றால், சரிதான்.

12. எனது அக்காவுக்கு மேற்படி பவன்குமார் என்பவருடன் திருமணமான பிறகு அவரது மகள் கீர்த்தனாவை எனது தகப்பனார் தான் பராமரித்து, படிக்க வைத்து வந்தார் என்றால், சரியல்ல.

13. எனக்கு ஹரிகிருஷ்ணா என்ற மருத்துவருடன் 27.08.2005 அன்று திருமணம் நடந்தது என்றால், சரிதான். எனது திருமணத்தை விசாகப்பட்டிணத்தில் எனது தகப்பனார் தான் நடத்தி வைத்தார் என்றால், சரிதான். எனது தகப்பனார் என்னை மருத்துவருக்கு திருமணம் செய்து வைத்ததால், என் தகப்பனார் எனக்கு மிகுந்த பொருள்கள் மற்றும் பணம் செலவழித்தும் ஆடம்பரமாக திருமணம் செய்து வைத்தார் என்றால், சரியல்ல, நான், என் கணவரை காதலித்து என் தகப்பனாரின் சம்மதத்துடன் திருமணம் செய்துக் கொண்டேன், திருமண செலவில் 20 சதவிகிதம் என் தகப்பனார் செய்தார், மீதி செலவை என் கணவர் தான் செய்தார். திருமணத்தின் போது எனக்கு என் தகப்பனார் வரதச்சனையாக எதுவும் கொடுக்கவில்லை. அந்த விவரத்தை என் தாவாவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

14. என் தகப்பனார் என்ன வேலை செய்து வந்தார் என்றால், ஸ்ரீகாபுரத்தில் மண்டல வருவாய் அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். எனது தாத்தா

பக்தவச்சல நாயுடு காலமாக பிறகு தாவா சொத்துக்களை யார் பராமரித்து வந்தது என்றால், அனைவருக்காகவும் சேர்ந்து 1–ம் பிரதிவாதி ஜானகிராமன் தான் பராமரித்து வந்தார். எனது தாவாவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ எனது தாத்தா பக்தவச்சல நாயுடு காலமான பிறகு தாவா சொத்துக்களை அனைத்து பாகஸ்தார்களுக்காகவும் 1–ம் பிரதிவாதி பராமரித்து வந்தார் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

15. தாவா சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தின் ஒரு பகுதியை எனது பாட்டி எனக்கு கொடுத்தாக சொல்லியுள்ளது சரியா, தவறா என்றால், சரிதான், வருமானத்தின் ஒரு பகுதியும், விளைச்சலில் ஒரு பகுதியும் கொடுத்தார். அது போல் வருமானத்தின் ஒரு பகுதியும், விளைச்சலில் ஒரு பகுதியும் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

16. எனது பாட்டி ரவனம்மாள் உயிருடன் இருந்த போது தாவா 2–வது அயிட்டத்தில் உள்ள 2 முதல் 4 இன சொத்துக்களை பொறுத்து கடந்த 30.05.2001 அன்று 2–ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால், சரிதான்.

17. தாவா 2–வது அயிட்டத்தில் உள்ள 2–வது இன சொத்தின் சரியான சர்வே எண் 76/3B1 மற்றும் 3–வது இன சொத்தின் சரியான சர்வே எண் 79/2A என்றால், சரியல்ல, தாவாவில் சொல்லியுள்ளது தான் சரியான எண் ஆகும். எனது பாட்டி ரவனம்மாள் 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தில் 1–ம் பிரதிவாதி ஜானகிராமன், 5–ம் பிரதிவாதி விஜயகுமார் மற்றும் 3–ம் பிரதிவாதியின் கணவரும், 4–ம் பிரதிவாதியின் தகப்பனாரான சுதாகர் என்பவர்களும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

18. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தை எனது பாட்டி, எனது சித்தியான

2–ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும், தற்போது தெரியாது என வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கின்றேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நாகேஸ்வர ராவ் என்பவருக்கு ஒரு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து அவர் 8–ம் பிரதிவாதி கிருஷ்ணன் பெயரில் 01.03.2007 அன்று வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்து, சுவாதீனமும் ஒப்படைத்துள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

19. வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த நாளில் இருந்து 8–ம் பிரதிவாதி கிருஷ்ணன் தான் கிரையம் பெற்ற சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி 8–ம் பிரதிவாதி கிருஷ்ணன் கிரையம் பெற்ற சொத்தை 9–ம் பிரதிவாதி ரகுபதி பெயருக்கு கடந்த 20.06.2007 அன்று வா.சா.ஆ.4 கிரையப் பத்திரத்தின் மூலம் கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

20. எனது பாட்டி ரவனம்மாள் வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தை 2–ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக் கொடுத்ததையும், அதன் பிறகு 2–ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தை 8–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த விவரமும், அதன் பிறகு 8–ம் பிரதிவாதி 9–ம் பிரதிவாதி பெயருக்கு வா.சா.ஆ.4 கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்த விவரம் தெரிந்து தான் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல, அந்த ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை.

21. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே 9–ம் பிரதிவாதி ரகுபதி காலமாகிவிட்டார் என்றால், சரிதான். மேற்படி ரகுபதி காலமாகிவிட்ட பிறகு அவர் கிரையம் பெற்ற சொத்துக்களை அவரது வாரிசுகளான 10 முதல் 12 வரை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

22. எனது பாட்டியான ரவனம்மாள், 2–ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த

வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு என்னைத் தவிர வேறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல, நானும், 6–ம் பிரதிவாதியும் வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு ஆட்சேபனை செய்தோம். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதியதற்கு ஆட்சேபனை தெரிவித்து நானோ, 6–ம் பிரதிவாதியோ ஆட்சேபனை எதுவும் தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினோமா என்றால், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய விவரம் எங்களுக்கு கடந்த 2015–ம் ஆண்டு தான் தெரிய வந்தது, தெரிந்த உடனே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

23. என் பாட்டி ரவனம்மாள் 06.01.2005 அன்று காலமானார் என்றால், சரிதான். அதன் பிறகு வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால், என் பாட்டி இறந்த பிறகு 1, 2 பிரதிவாதிகளை பலமுறை அணுகி பாகம் கேட்டும் அவர்கள் பாகம் கொடுக்க மறுத்துவிட்டு, என்னை அடித்துவிட்டார்கள். பாகம் கொடுக்க மறுத்த உடனே பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவோ, வழக்கு தாக்கல் செய்யவோ நடவடிக்கை எடுத்தேனா என்றால், இவ்வழக்கை தாக்கல் செய்யும் வரை பாகம் வேண்டும் என கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

24. நான் பாகம் கேட்ட போது என்னை 1, 2 பிரதிவாதிகள் பாகம் கொடுக்க மறுத்து அடித்துவிட்டார்கள் என்ற விவரத்தை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால், அந்த விவரத்தை எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன், ஆனால் தாவாவில் சொல்லப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை.

இரு தரப்பு வேண்டுகோளின் பேரில் உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(Time: 01.30 P.M.)

**உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

Starting Time. 02.45 P.M.

25. எனது தாத்தா பக்தவச்சல நாயுடு தான் முதலில் காலமானார் என்றால், சரிதான். எனது தாத்தா காலமாவதற்கு முன்பே எனது தாயார் காலமாகிவிட்டார் என்றால், சரிதான். எனது தாயார் காலமாகிய பிறகு தாவா சொத்துக்களில் எனக்கும், எனது அக்காவான 6–ம் பிரதிவாதிக்கும் தலா 1/15 பாகம் உரிமை என்று சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

26. என் தாத்தா 1998–ம் ஆண்டு காலமான பிறகே தாவா சொத்துக்களில் எனக்கு பாகம் கேட்டு எனது பாட்டிக்கோ அல்லது எனது தாயாரின் இதர உடன்பிறந்தவர்கோ நான் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், அந்த சமயத்தில் எனக்கு சிறு வயது இருந்ததால் அது போன்ற அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் இளவர் வயது கடந்த பிறகு பாகம் கேட்டு நடவடிக்கை எடுத்தேனா என்றால், தாவா சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் எனது தகப்பனார் என்னிடம் கொடுத்ததே இல்லை, அதனால் உடனடியாக பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க இயலவில்லை. அந்த விவரத்தை எனது வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை.

27. என்னையும், எனது அக்காவான 6–ம் பிரதிவாதியையும் படிக்க வைத்து, பராமரித்து வந்த வகையிலும், எங்கள் இருவரின் திருமணத்திற்காகவும் வெளியில் வாங்கிய கடன்களை அடைக்க வேண்டிய சட்டப்படியான தேவைக்காக வேண்டியே 2–ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் செய்து வைக்கப்பட்ட சொத்துக்களை வா.சா.ஆ.3 மூலம் கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல, எனது திருமணம் 2005–ம் ஆண்டு நடைபெற்றது, ஆனால் வா.சா.ஆ.3 கிரையம் 2007–ம் ஆண்டு நடைபெற்றது, எனது திருமணத்திற்காக கடன் எதுவும் யாரும் வாங்கவில்லை.

28. எனது திருமணத்தின் போது, எனது தகப்பனாரான 7-ம் பிரதிவாதியும், சிறிய தாயாரான 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து எனக்கு 30 சவரன் நகை, 10 லட்சம் ரொக்கம் மற்றும் ரூ.5,00,000/-ம் மதிப்புள்ள சீர் வரிசை பொருட்களை கொடுத்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால், சரியல்ல. அவ்வளவு செலவு செய்து எனக்கு திருமணம் செய்து வைத்த காரணத்தால், திருமணத்தின் போதே எனக்கு சொத்துக்களில் பாகம் வேண்டாம் என எனது தகப்பனாரிடம் நான் சொல்லிவிட்டேன் என்றால், சரியல்ல.

29. 1, 5 பிரதிவாதிகள் மற்றும் காலம் சென்ற சுதாகர் ஆகிய மூவரும் சேர்ந்து கடந்த 2009-ம் ஆண்டு தாவா 1-வது அயிட்டத்தில் உள்ள 3-வது இன சொத்தை ஒரு அருள் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விவரத்தை பதிலுரையில் சொல்லியும், மேற்படி அருள் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அந்த விவரம் எனக்கு இதுநாள் வரை தெரியவில்லை.

30. 1998-ம் ஆண்டு எனது தாத்தாவும், 2005-ம் ஆண்டு என் பாட்டியும் காலமான பிறகு தாவா சொத்துக்களை நானும், 6-ம் பிரதிவாதியும் எப்போதும் கூட்டாக அனுபவித்து வந்ததில்லை என்றால், சரியல்ல. எனது திருமணத்திற்கு பிறகு நான் விசாகப்பட்டிணத்தில் நிரந்தரமாக வசித்து வருவதால் தாவா சொத்துக்களுக்கு எப்போது வந்ததில்லை என்றும், அதில் வந்த வருமானத்தின் பங்களிப்பையும் பெற்றுக் கொண்டதில்லை என்றால், சரியல்ல, அவ்வப்போது வந்து வருமானத்திலும், விளைச்சலிலும் பங்கு பெற்றுக் கொண்டு செல்வேன்.

31. தாவா சொத்துக்களை பொறுத்து 2-ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம், 2-ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம், எனது தாய்மாமன்களான 1, 5 பிரதிவாதிகள் மற்றும் காலம் சென்ற சுதாகர் ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் பற்றியும் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக வேண்டி எதுவும் தெரியாது என்று பொய்யாக

சொல்கிறேன் என்றால், சரியல்ல.

32. வா.சா.ஆ.2, 3, 4 ஆவணங்களை எதிர்த்து தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் 2015–ம் ஆண்டு தான் ஏற்பட்டது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதே சட்டப்படி ஏற்றக்தக்கதல்ல என்பதால், தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1, 2, 7, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 03.19.P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.09.24 16:14:56 +0530